# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
மூன்றாம் தவணைப் பரீட்சை - 2021
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 3rd Term Examination - 2021

**இணைந்த கணிதம் – B**
**Combined mathematics – B**

**Gr -12 (2022)** | **10** | **T** | **B**

*11)* a) $p, q \in R$ எனவும் $f(x) = x^2 + px + q$ எனவும் கொள்வோம். $f(x) = 0$ இன் பிரித்துக் காட்டி $\Delta_1$ ஐ $p, q$ இன் சார்பில் எழுதுக.
$\propto, \beta$ என்பன $f(x) = 0$ இன் மூலகங்கள் எனவும் $\lambda = \propto + \beta^2, \mu = \beta + \propto^2$ எனவும் கொள்வோம். $\lambda + \mu = p^2 - p - 2q$ எனக் காட்டி $\lambda, \mu$ ஆகியவற்றை மூலகங்களாகக் கொண்ட இருபடிச்சமன்பாடு $g(x) = 0$ எனக் காட்டுக; இங்கு $g(x) = x^2 - (p^2 - p - 2q)\,x + q^2 + q + 3pq - p^3$ ஆகும்.
$g(x) =$ இன் பிரித்துக் காட்டி $\Delta_2$ ஐ $p, q$ சார்பில் எழுதி, $\Delta_2 = (P + 1)^2\,\Delta_1$ எனக் காட்டுக.
$\propto, \beta$ என்பன கற்பனையானவை எனவும் $\lambda, \mu$ என்பன மெய்யானவை எனவும் தரப்படின் $P = -1$ எனக் காட்டுக. மேலும் $\lambda = \mu = 1 - q$ எனவும் காட்டுக.

b) $a \in R$ எனவும் $h(x) = 3x^3 + 5x^2 + ax - 1$ எனவும் கொள்வோம். $3x - 1$ ஆனது $h(x)$ இன் ஒரு காரணி எனின் $a = 1$ எனக்காட்டுக. $a$ இன் இப்பெறுமானத்திற்கு $x + 1$ ஆனது $h(x)$ இன் மற்றைய ஒரு காரணி எனக் காட்டுக. இதிலிருந்து, $h(x) = \alpha(x + \beta)(x + \gamma)^2$ ஆக இருக்கத்தக்கதாக மாறிலிகள் $\alpha, \beta, \gamma$ ஆகியவற்றைத் துணிக.

*12)* a) $x \neq -1$ இற்கு $f(x) = \frac{2x}{(x+1)^2}$ எனக் கொள்வோம் $x \neq -1$ இற்கு $f(x)$ இன் பெறுதி $f'(x)$ ஆனது $f'(x) = \frac{2(1-x)}{(x+1)^3}$ இனால் தரப்படுகின்றது எனக் காட்டுக.
இதிலிருந்து, $f(x)$ அதிகரிக்கும் ஆயிடையையும் குறைகின்ற ஆயிடைகளையும் காண்க.
மேலும் $f(x)$ இன் திரும்பற் புள்ளியின் ஆள்கூறுகளையும் காண்க.
$x \neq -1$ இற்கு $f''(x) = \frac{4(x-2)}{(x+1)^4}$ எனத் தரப்பட்டுள்ளது. $y = f(x)$ இன் வரைபின் விபத்திப்புள்ளியின் ஆள்கூறுகளையும் காண்க.
$y = f(x)$ இன் வரைபை அணுகுகோடுகள், திரும்பற்புள்ளி, விபத்திப்புள்ளி ஆகியவற்றைக் காட்டி பரும்படியாக வரைக.

b) கனவுரு வடிவ உலோகக் குற்றியொன்றின் பக்க நீளங்கள் $x\,cm$, $3x\,cm$, $y cm$ ஆகும். அதன் மொத்த மேற்பரப்பளவு $98\,cm^2$ எனின் $y = \frac{49-3x^2}{4x}$ எனக் காட்டுக.
இந்நிபந்தனைக்குட்பட்டு குற்றியின் கனவளவு உயர்வாக இருக்கத்தக்கதாக அதன் பரிமானங்களைக் காண்க.

13) a) $A \equiv (0,3),\ B \equiv (-1,-4),\ C \equiv (-5,8)$ எனக் கொள்வோம்.

(i) $AB, BC, CA$ ஆகியவற்றின் நீளங்களைக் கண்டு முக்கோணி ABC ஆனது இருசமபக்க முக்கோணி எனக் காட்டுக.

(ii) $A, B$ ஆகிய புள்ளிகளினூடாகச் செல்லும் நேர்கோடு $\ell_1$ இன் சமன்பாட்டையும் A, C ஆகிய புள்ளிகளினூடாகச் செல்லும் நேர்கோடு $\ell_2$ இன் சமன்பாட்டையும் காண்க.

(iii) கோணம் $B\hat{A}C$ இன் இருகூறாக்கி $\ell$ இன் சமன்பாடு $x - 3y + 9 = 0$ எனக்காட்டுக.

(iv) நேர்கோடு $\ell \equiv x - 3y + 9 = 0$ மீது உள்ள யாதாயினும் ஒரு புள்ளி P இன் ஆள்கூறுகள் வடிவம் $(3t, t+3)$ இல் எழுதப்படலாம் எனக்காட்டுக; இங்கு $t \in R$. $PB, PC$ ஆகிய கோட்டுத்துண்டங்களின் படித்திறன்களை t சார்பாகக் காண்க. இதிலிருந்து, BQCR ஒரு சதுரம் ஆகுமாறு Q, R இன் ஆள்கூறுகளைக் காண்க.


14) a) $\sin(A+B)$ ஐ $\sin A, \cos A, \sin B, \cos B$ ஆகியவற்றில் எழுதி, $\sin(A-B)$ இற்கு ஓர் இயல்பொத்த கோவையைப் பெறுக.

$2\ \sin A\ \cos B = \sin(A+B) + \sin(A-B)$ எனவும்.

$2\ \cos A\ \sin B = \sin(A+B) - \sin(A-B)$ எனவும் உய்த்தறிக.

இதிலிருந்து, $0 < x < \frac{\pi}{2}$ இற்கு $2\cos 4x\ \sin 3x = \sin 5x$ ஐத் தீர்க்க.

b) வழக்கமான குறிப்பீட்டில் ஒரு முக்கோணி ABC இற்குச் சைன் நெறியைக் கூறுக.




உருவில் காட்டப்பட்ட முக்கோணிகள் ABC, ADC இல் $B\hat{A}C = A\hat{C}D = 3\propto, B\hat{C}A = \propto$, $D\hat{A}C = 5\propto$ உம் $BC = DC$ உம் ஆகும். சைன் நெறியை $ABC, ADC$ ஆகிய முக்கோணிகளுக்குப் பிரயோகிப்பதன் மூலம் $\frac{\sin 8\propto}{\sin 4\propto} = \frac{\sin 5\propto}{\sin 3\propto}$ எனக் காட்டுக.

மேலே $(a)$ இல் உள்ள சமன்பாட்டின் தீர்வுகளையும் பயன்படுத்தி $\propto$ இன் பெறுமானத்தைக் காண்க.

c) $\tan^{-1}\left(\frac{x-1}{x-2}\right) + \tan^{-1}\left(\frac{x+1}{x+2}\right) = \frac{\pi}{4}$ ஐத் தீர்க்க.

15) a) $AB = 451m$ ஆகுமாறு A, B என்பன ஒரு நேர்கோட்டுப் பாதையில் உள்ள இருமரங்கள் ஆகும். ஒரு முயல் A இல் ஓய்வில் இருந்து தனது பயணத்தை ஆரம்பித்து 8 செக்கன்களுக்கு சீரான ஆர்முடுகலுடன் சென்று $2u$ வேகத்தை பெற்று பின் 12 செக்கன்களுக்கு அதே வேகத்தை பேணி பின் $\frac{11}{6}\,ms^{-2}$ அமர்முடுகளுடன் இயங்கி $B$ ஐ $u$ வேகத்துடன் கடந்து ஓய்வடைகின்றது.

(i) முயல் ஓய்வடையும் வரை முயலின் இயக்கத்திற்கான வேகநேர வரைபை வரைக.

(ii) u ஐக் கணிக்க.

(iii) முயல் இயங்கத்தொடங்கி எவ்வளவு நேரத்தில் B ஐ கடக்கும்.

(iv) முயல் A இல் இருந்து எவ்வளவு தூரத்தில் ஓய்வடையும்.

b) ஒரு கப்பல் தெற்கு நோக்கி $15\sqrt{2}\,km/h$ சீரான கதியில் செல்கின்றது. ஒரு குறித்த கணத்தில் ஒரு படகானது கப்பலுக்கு நேர் மேற்கே $60\,km$ தூரத்தில் உள்ளது. படகு தென்கிழக்குத் திசையில் $15\,km/h$ சீரான கதியில் பயணிக்கின்றது.

(i) சார்பு வேக கோட்பாட்டைப் பயன்படுத்தி வேக முக்கோணியை வரைபதன் மூலம் படகு சார்பாக கப்பலின் வேகத்தைக் காண்க.

(ii) படகு சார்பாக கப்பலின் பாதையைக் காண்க.

(iii) படகுக்கும் கப்பலுக்கும் இடையான மிகக் குறைந்த தூரத்தைக் காண்க.

(iv) இத்தூரத்தை அடைய எடுக்கும் நேரத்தையும் காண்க.

16) a) உயரமாக நிலைப்படுத்தப்பட்ட ஒரு ஒப்பமான இலேசான கப்பியின் மேலாகச் செல்லும் ஒரு இலேசான நீளா இழையின் முனைகளில் முறையே $km, 3m$ $(k < 3)$ திணிவுகள் உடைய $P, Q$ துணிக்கைகள் இணைக்கப்பட்டு இழையின் பகுதிகள் இறுக்கமாகவும் நிலைக்குத்தாகவும் இருக்க கிடைத்தரையில் இருந்து ஒரே உயரத்தில் பிடிக்கப்பட்டு மெதுவாக விடப்படுகின்றது. $Q$ ஆனது $\frac{g}{3}$ ஆர்முடுகளுடன் இயங்கின்


(i) $Q$ இன் பகுதியில் இழையில் உள்ள இழுவையைக் காண்க.

(ii) $P$ இன் பகுதியில் இழையின் இழுவை $Q$ இன்பகுதியில் இழையின் இழுவைக்கு சமனாக இருப்பதற்கான காரணம் யாது?

(iii) $k$ இன் பெறுமானத்தைக் காண்க.

(iv) $Q$ இயங்கத் தொடங்கி 2 செக்கனில் தரையை மோதி ஓய்வடைகின்றது எனில் P ஆனது தரையில் இருந்து ஆகக்கூடியது எவ்வளவு உயரம் செல்லும். (P கப்பியை அடையாதவாறு இழை நீளமானது எனக் கொள்க)

b) $\Delta ABC$ ஆனது 5m திணிவு உடைய ஓர் சீரான ஒப்பமான ஆப்பின் புவியீர்ப்பு மையத்தின் ஊடான நிலைக்குத்து குறுக்குவெட்டாகும் $B\hat{A}C = \propto$, $ACB = \frac{\pi}{2}$ ஆகும். BC ஐ கொண்ட முகம் ஓர் ஒப்பமான கிடை நிலத்தில் இருக்குமாறு வைக்கப்பட்டு திணிவு 2m உடைய ஒரு துணிக்கை P ஆனது A இற்கு அருகில் பிடிக்கப்பட்டது முகம் AB இன் அதி உயர் சரிவுக்கோட்டின் வழியே இயங்குமாறு மெதுவாக விடப்படுகின்றது. துணிக்கை ஆப்பின் முகத்தில் உள்ள போது




(i) ஆப்பு, துணிக்கையில் தாக்கும் விசைகளைக் குறிக்க.

(ii) ஆப்பு, துணிக்கையின் ஆர்முடுகல்களைக் குறிக்க.

(iii) ஆப்பின் ஆர்முடுகலையும், ஆப்பு சார்பாக துணிக்கையின் ஆர்முடுகலையும் காண்க.

(iv) $AC = a$ எனில் துணிக்கை B ஐ அடைய எடுக்கும் நேரத்திற்கான கோவையை எழுதுக.

*17)* a) O என்ற உற்பத்தி குறித்து A, B, C என்ற புள்ளிகளின் தானக்காவிகள் முறையே $\underline{a}$ , $\underline{b}$ , $\underline{b} - \underline{a}$ ஆகும். $AB$ இல் $AD:DB = 3:1$ ஆகுமாறு $D$ ஓர் புள்ளி நீட்டிய $CB, OD$ என்பன $M$ இல் சந்திக்கின்றன. $OM = \lambda\, OD,\ CM = \mu CB$ எனக் கொள்க.

(i) $D$ இன் தானக்காவியைக் காண்க.

(ii) $\overrightarrow{OM}$ , $\overrightarrow{CM}$ என்பவற்றை $\lambda, \mu, \underline{a}$ , $\underline{b}$ சார்பாக காண்க.

(iii) $\lambda, \mu$ ஐ கண்டு இதிலிருந்து D ஆனது OM ஐ பிரிக்கும் விகிதத்தைக் காண்க.
B, CM ஐ பிரிக்கும் விகிதத்தையும் காண்க.

b) $ABCD$ சரிவகம் $AB/DC, D\hat{A}B = A\hat{B}C = 60^{\circ}$ $M$ என்பது AB இன் நடுப்புள்ளி $AB = 2a,\ DC = a$ $8, 6, 4, \mu, \lambda\, N$ விசைகள் முறையே $\overrightarrow{AB}, \overrightarrow{BC}, \overrightarrow{DC}, \overrightarrow{AD}$ , $\overrightarrow{DM}$ வழியே தாங்குகின்றன.

(i) விளையுள் AC வழியே இருப்பின் $\lambda, \mu$ என்பனவற்றைக் காண்க.

(ii) $\mu, \lambda$ இன் இப்பெறுமானங்களுக்கு விளையுளைக் காண்க.

(iii) இவ்விளையுள் B ஊடாக செல்வதற்கு சேர்க்கப்பட வேண்டிய இணையைக்காண்க.

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2021**

# Conducted by Field Work Centre, Thondaimanaru.

# 3rd Term Examination - 2021

FWC

| | | |
|---|---|---|
| **இணைந்த கணிதம் – A** | **Three Hours** | **10 T A** |
| **Combined mathematics – A** | **Gr -12 (2022)** | |

**சுட்டெண்** | | | | | | |

**அறிவுறுத்தல்கள்:**

- பகுதி A இன் எல்லாவினாக்களுக்கும் விடைஎழுதுக. ஒவ்வொரு வினாவுக்கும் விடைகளைத் தரப்பட்ட இடத்தில் எழுதுக. மேலதிக இடம் தேவைப்படுமெனின், நீர் மேலதிகத் தாள்களைப் பயன்படுத்தலாம்.
- பகுதி B இல் உள்ள 7 வினாக்களில் விரும்பிய 5 வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ஒதுக்கப்பட்ட நேரம் முடிவடைந்ததும் பகுதி A ஆனது பகுதி B யிற்கு மேலே இருக்கக் கூடியதாக இரு பகுதிகளையும் இணைத்துப் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையளிக்க.
- வினாத்தாளின் பகுதி B யை மாத்திரம் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கப்படும்.

| இணைந்த கணிதம் I | | |
|---|---|---|
| பகுதி | வினா எண் | கிடைத்த புள்ளிகள் |
| A | 1 | |
| | 2 | |
| | 3 | |
| | 4 | |
| | 5 | |
| | 6 | |
| | 7 | |
| | 8 | |
| | 9 | |
| | 10 | |
| B | 11 | |
| | 12 | |
| | 13 | |
| | 14 | |
| | 15 | |
| | 16 | |
| | 17 | |
| வினாத்தாள் I இன் மொத்தம் | | |

| | |
|---|---|
| இணைந்த கணிதம் I | |
| இணைந்த கணிதம் II | |
| இறுதிப் புள்ளிகள் | |

1) $K \in R$ இற்கு $f(x) = x^2 + 2kx + k + 2$ எனக் கொள்வோம். $f(x)$ இன் இழிவுப் பெறுமானத்தைக் $k$ இன் சார்பில் காண்க. இதிலிருந்து, சார்பு $y = f(x)$ ஆனது $x$ அச்சைத் தொடுமாயின் k இன் பெறுமானங்களைக் காண்க.

2) $y = |x-2|$, $y = \frac{1}{2}x$ ஆகியவற்றின் வரைபுகளை ஒரே வரிப்படத்தில் பரும்படியாக வரைக. இதிலிருந்து, சமனிலி $x > 2|x-2|$ ஐத் திருப்திப்படுத்தும் $x$ இன் மெய்ப்பெறுமானங்களைக் காண்க.

3) $0 < \theta < \frac{\pi}{2}$ இற்கு $x = 3\cos\theta$ , $y = 2\ \sin\theta$ எனத் தரப்பட்டுள்ளன. $\frac{dy}{dx} = -\frac{2}{3}\cot\theta$ எனக் காட்டி, $\theta = \frac{\pi}{4}$ இல் $\frac{dy}{dx}$ ஐக் காண்க.

4) $\lim_{x \to \frac{\pi}{6}} \frac{\cos\left(x+\frac{\pi}{3}\right)}{\sqrt{6x}-\sqrt{\pi}} = -\frac{\sqrt{\pi}}{3}$ எனக் காட்டுக.

5) $\sin\frac{3\pi}{5} = \sin\frac{2\pi}{5}$ எனக் காட்டுக.

$4\cos^2\frac{\pi}{5} - 2\cos\frac{\pi}{5} - 1 = 0$ ஐ உய்த்தறிக.


இதிலிருந்து, $\cos\frac{\pi}{5} = \frac{\sqrt{5}+1}{4}$ எனக் காட்டுக.

...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................

6) கிடைத்தரையில் உள்ள புள்ளி O இல் இருந்து 3h உயரத்தில் உள்ள புள்ளி A ஆகும். A இல் இருந்து நிலைக்குத்தாக மேல்நோக்கி புவியீர்ப்பின் கீழ் u வேகத்துடன் எறியப்படும் துணிக்கை எறியற்புள்ளியில் இருந்து h உயரத்தில் கணநிலை ஓய்வடைகிறது எனில் கிடைத்தரையை அடிக்கும் வரையான துணிக்கையின் இயக்கத்திற்கான வேகநேர வரைபை வரைக. வேக நேரவரைபில் இருந்து துணிக்கை தரையை அடிக்கும் கதி $2\sqrt{2gh}$ எனக்காட்டுக.

...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................
...........................................................................................................

7) படிக்கட்டு ஒன்றின் எல்லா படிகளினதும் நீளம் b ஆகவும் உயரம் a ஆகவும் உள்ளது. அதன் உச்சியின் விளிம்பில் இருந்து படத்தில் காட்டப்பட்டவாறு கிடையாக u வேகத்துடன் எறியப்படும் துணிக்கை உச்சியில் இருந்து இரண்டாவது படியின் விளிம்பை மட்டுமட்டாக கடந்து செல்கிறது எனில் u ஐ a, b, g சார்பில் காண்க.




.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

8) $1200kg$ திணிவுடைய கார் ஒன்று கிடைத்தரையில் 400N மாறாத்தடை விசைக்கு எதிராக 2.4 kw மாறாவலுவில் இயங்குகின்றது. காரின் கதி V ஆக உள்ள போது அதன் ஆர்முடகல் $\frac{60-V}{3V}$ எனக்காட்டுக. காரானது சீரான கதியில் அதே வலுவுடன் அதே மாறா தடைவிசைக்கு எதிராக இயங்கின் கார் இயங்கும் கதியை உய்த்தறிக.

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

9) A B C D E F இடஞ்சுழிப்போக்கில் அமைந்தஒரு ஒழுங்கான அறுகோணி ஆகும். $AB = 2i$ எனில் $\overrightarrow{CD}$ ஐ $i$, j சார்பில் காண்க. இங்கு $\underline{i}$ , $\underline{j}$ என்பன வழமையான குறியீட்டில் x, y அச்சுக்கள் வழியே ஆன அலகுக்காவிகள் ஆகும்.

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

10) $2a$ நீளமும் 5w நிறையும் உடைய ஒரு சீரான கோல் AB இன் முனை A கிடைத்தரையில் உள்ள புள்ளி ஒன்றுக்கு சுயாதீனமாக பிணைக்கப்பட்டு முனை B இல் கோலுக்கு செங்குத்தாக பிரயோகிக்கப்படும் விசை F இனால் கோல் ஆனது கிடையுடன் $30^{\circ}$ இல் சமநிலையில் பேணப்படுகின்றது. விசை F இன் பருமனையும் பிணையலில் தாக்கும் மறுதாக்கம் கிடையுடன் ஆக்கும். கோணத்தையும் காண்க.

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………